**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.**

**(கடித எண்.த.மி.ஒ.ஆ. / AD(L)/F. அறிவிக்கைகள் / DO 78/2007.**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

**(அறிவிக்கை த.மி.ஒ.ஆ. /TR / 5 /2 – 4, 2007 டிசம்பர் 18–ஆம் நாளிட்டது)**

2003 ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின் **181**ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் **61**ஆம் பிரிவின்படி **2005**ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்படுவதாலும் மற்றும் **2005** ஆகஸ்டு **3**ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் (பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) அது வெளியிடப்பட்டிருப்பதாலும்,

மற்றும் **2003** ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தில், **2007** ஆம் ஆண்டு மின்சாரத் (திருத்தம்) சட்டத்தால் செய்யப்பட்ட திருத்தங்களைக் கவனத்திற் கொண்டு மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளை மேலும் திருத்தம் செய்வது அவசியமெனக் கருதுவதாலும்,

தற்போது, அதற்காக, **2003** ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **36/2003**) **181** ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி மற்றும் முந்தைய வெளியீட்டிற்குப் பின்பு, இதன்மூலம், ( இதன் பின்பு இதில் "முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் " என்று குறிப்பிடப்படும்) மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்படுகிறது, அவையாவன **:-**

**2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (நான்காம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள்.**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(i) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (நான்காம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

(ii) இந்த ஒழுங்குமுறை விதிகள், தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. <u>முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 4ஆம் ஒழுங்குமுறை விதிக்குரிய திருத்தம்</u> :**

(i) முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 4ஆம் ஒழுங்குமுறை விதியின் (g) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :-

"(g) மின்கட்டண வீதம், மின்வழங்கல் செலவை பிரதிபலிக்குமாறு இருப்பதோடு, ஆணையத்தால் குறித்துரைக்கப்படும் முறையில் குறுக்கு உதவித் தொகையைக் குறைத்தல் வேண்டும் "

**3. <u>முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 85ஆம் ஒழுங்குமுறை விதிக்குரிய திருத்தம்</u> :**

முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 85ஆம் ஒழுங்குமுறை விதியின் **(3)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதிக்குப் பதிலாக பின்வரும் உள்–ஒழுங்குமுறை விதி அமைக்கப்படுதல் வேண்டும் :-

" (3) ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்படும் சாலை வரைபடத்திற்கிணங்க, குறுக்கு உதவித்தொகையை ஏறுவரிசையில் குறைப்பதற்கு ஆணையம் முயற்சி செய்யலாம். "

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**இரா. பாலசுப்பிரமணியன்,**
செயலாளர்